RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்





சிவகங்கை | மலர்-5 | இதழ்- 109 | ஏப்ரல்.26 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# ஓய்வுக்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் கொடைக்கானல் வருகை: ட்ரோன்கள் பறக்கத் தடை

திண்டுக்கல்: ஏப்.26-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலுக்கு ஓய்வெடுப்பதற்காக குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை மதியம் (ஏப்.25) வந்தார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடந்து முடிந்துள்ள நிலையில், முதல்வர் ஸ்டாலின் குடும்பத்துடன் 5 நாட்கள் கொடைக்கானலில் ஓய்வெடுக்க திட்டமிட்டுள்ளார். இதன்படி, முதல்வர் ஸ்டாலின் சனிக்கிழமை (ஏப்.25) காலை சென்னையில் இருந்து தனி விமானத்தில் குடும்பத்துடன் புறப்பட்டு மதுரை வந்தார். அங்கிருந்து கார் மூலம் பகல் 2.30 மணிக்கு கொடைக்கானலுக்கு வந்தார்.

வழிநெடுகிலும் சாலையோரம் முதல்வரை வரவேற்க நின்றிருந்த தொண்டர்கள், பொதுமக்களுக்கு காரில் சென்ற முதல்வர் ஸ்டாலின் கையசைத்தபடி சென்றார். சில இடங்களில் அவரை வரவேற்க காத்திருந்த திமுக மற்றும் கூட்டணி கட்சியினரிடம் புத்தகங்களை



அன்பளிப்பாக பெற்றார். கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் அவர் ஓய்வெடுக்கிறார். விடுதியில் கட்சியினர் யாரும் அவரை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. முதல்வர் வருகையை முன்னிட்டு, கொடைக்கானலில் ஏராளமான போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏப்ரல் 29ம் தேதி வரை ஓய்வெடுக்கும் முதல்வர் ஏப்ரல் 30ம் தேதி மீண்டும் சென்னை திரும்ப உள்ளனர். எனவே, ஏப்ரல் 30 வரை கொடைக்கானல் மலைப்பகுதியில் ஆளில்லா விமானங்கள் (ட்ரோன் கேமரா) பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் உத்தரவிட்டுள்ளார்.

அதே சமயம், சுற்றுலா பயணிகளுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. கடந்த 2021ல் சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் 2024ல் மக்களவை தேர்தல் முடிவடைந்ததும் ஸ்டாலின் தனது குடும்பத்துடன் கொடைக்கானல் வந்து தங்கி ஓய்வெடுத்தது குறிப்பிடத்தக்கது. இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் ஓய்வெடுக்க வந்துள்ளார்.

## சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் மரணம்: வழக்கை முடித்து வைத்ததை எதிர்த்த மனு தள்ளுபடி

சென்னை: ஏப்.26-

சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் சிறையில் மரணம் அடைந்தது தொடர்பான வழக்கை முடித்து வைத்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ராம்குமாரின் தந்தை தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் பொறியாளர் சுவாதி கடந்த 2016ம் ஆண்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதான ராம்குமார் அதே ஆண்டு சிறையில் மின்சார வயரை கடித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்பட்டது.

இதுதொடர்பான வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் காவல் ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் கடந்த 2020ல் முடித்து வைத்தது. இந்த உத்தரவை எதிர்த்து ராம்குமாரின் தந்தை பரமசிவம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில், சென்னை



காவல் ஆணையரின் அறிக்கை அடிப்படையில் ராம்குமார் மரணத்தை தற்கொலை என முடிவு செய்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து அது தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஏ.பாலாஜி மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் தரப்பில் வழக்கறிஞர் வி.டி.பாலாஜி, காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் கே.எம்.டி. முகிலன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் காவல்துறை, மனித உரிமை ஆணைய புலன் விசாரணைக்குழு ஆகியவற்றின் விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் தான் தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளது. ஆணையத்தின் அந்த உத்தரவில் தலையிட எந்த காரணமும் இல்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

## மதுரை சித்திரை திருவிழா அடிப்படை வசதிகளை அரசு நிறைவேற்ற இந்து முன்னணி வலியுறுத்தல்

சென்னை: ஏப்.26-

பல லட்சம் பக்தர்கள் கலந்து கொள்ளும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழாவுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட வேண்டும் என்று இந்து முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கை: மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் சித்திரை திருவிழாவானது ஆண்டுதோறும் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. வருடா வருடம் சித்திரை திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்த ஆண்டு நடைபெறும் இந்த திருவிழாவில் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தர இந்து சமய அறநிலையத்துறை முனைப்புடன் செயல்பட வேண்டும்.

அக்னி வெயில் சுட்டெரிப்பதால் பக்தர்கள் தங்குவதற்கு ஆங்காங்கே நிழற்குடைகள் அமைப்பது, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தித் தருவது, போக்குவரத்து நெரிசலை சரி



செய்வது போன்ற முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றி சராசரி நாட்களிலேயே இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளது. திருவிழா காலம் என்பதால் அதிகமான வாகனங்கள் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும். எனவே வாகனங்களை நிறுத்துவதற்கு ஏதுவாக பார்க்கிங் வசதிகளை அதிகப்படுத்த வேண்டும்.

மேலும், போக்குவரத்து இடையூறு ஏற்பட்டால் அவசர காலத்தில் மக்கள் செல்வதற்கு இடையூறாக இருக்கும். எனவே போக்குவத்து நெரிசலை கட்டுக்குள் கொண்டுவர அதிக காவலர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

சிறு குழந்தைகள் முதல் வயதான பெரியவர்கள் வரை இந்த விழாவில் அதிக அளவில் கலந்து கொள்வதால் மருத்துவ முதலுதவி வசதிகளை ஆங்காங்கே ஏற்படுத்த வேண்டும்.

மிகவும் தொன்மையான சித்திரை திருவிழாவில் பொதுமக்களும் பக்தர்களும் தாமாக முன்வந்து அன்னதானம் நீர் மோர் பந்தல் அமைப்பது போன்ற சமூகப் பணிகளில் ஈடுபடுகின்றனர். பக்தி நோக்கோடு அமைக்கப்படும் இது போன்ற காரியங்களுக்கு அரசாங்கம் எந்த விதமான தொந்தரவும் செய்யக்கூடாது என கேட்டுக்கொள்கிறோம்.

வெளியூர்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் திரளாக கலந்து கொள்வதால் அவர்கள் தங்குவதற்கான தற்காலிக ஏற்பாடுகளையும் அறநிலையத்துறை முன்னின்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

சித்திரை திருவிழாவில் மீனாட்சி திருக்கல்யாணம் என்பது மிகவும் முக்கியமான நிகழ்வாகும். இந்த திருக்கல்யாணத்தை காண்பதற்காக பக்தர்களுக்கு வழங்கப்படும் டிக்கெட்டுகளில் முறைகேடு நடப்பதாக புகார் வந்துள்ளது. திருக்கல்யாணம் மற்றும் தரிசனம் சம்பந்தமான தகவல்களை இணைய வழியில் தருகிறோம் என அறநிலையத்துறை அறிவித்துள்ளது. ஆனால் பக்தர்கள் இணையத்தில் சென்று தேடினால் அந்த இணைய பக்கம் முடக்கப்பட்டிருக்கிறது. இதனால் டிக்கெட் முன்பதிவு செய்வதற்கு பக்தர்கள் சிரமப்படுகின்றனர். திருக்கல்யாண வைபவ டிக்கெட்டுகள் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதாகவும் பலர் தெரிவிக்கின்றனர்.

சாதாரண காலங்களில் கோயில்களில் தரிசன முறை கட்டணமும் சிறப்பு பூஜைகளுக்கான கட்டணமும் பக்தர்களை சிரமப்படுத்தி வரும் வேளையில் மிகவும் முக்கியத் திருவிழாவான திருக்கல்யாணத்திலும் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கள்ளச் சந்தையில் டிக்கெட் விற்பது கண்டனத்துரியதாகும்.

இது போன்ற முறைகேடுகளை இந்து சமய அறநிலையத்துறை ஆராய்ந்து மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருவதுடன் திருவிழா காலங்களில் முறையான தரிசனத்தை பக்தர்கள் பெறுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும் எனவும் இந்து முன்னணி சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## “வாக்கு எண்ணிக்கையின் போது அதிமுக, கூட்டணிக் கட்சி முகவர்கள் கவனம்” இபிஎஸ் அறிவுரை

சென்னை: ஏப்.26-

“வாக்கு எண்ணிக்கை முடியும்வரை மிகுந்த விழிப்புடனும், கவனத்துடனும் அயராது பணியாற்றிட வேண்டுகிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்” என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் ஏப். 23 அன்று தமிழ் நாட்டில் நல்லாட்சி மலர வேண்டும் என்பதற்காக, கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் காலை 7 மணி முதல் மாலை வரை வரிசையில் நின்று, தமிழக வரலாற்றில் முன்எப்போதும் இல்லாத அளவில் மிக அதிகமான வாக்குப் பதிவை உறுதி செய்துள்ள தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் திமுக அரசின் மீது மக்களுக்கு இருக்கின்ற வெறுப்பை நாம் கண்கூடாகக் கண்டோம். விரக்தியின் விளிம்பில் உள்ள திமுகவினர், எப்படி புறவாசல் வழியாக ஆட்சியைப் பிடிக்கலாம் என்ற எண்ணத்தோடு, அதற்கான முயற்சிகளை இந்தத் தேர்தலிலும் எடுப்பதற்குத் தயாராக உள்ளனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23 அன்று முடிந்துள்ள நிலையில், மே.4 அன்று வாக்கு எண்ணும் பணி நடைபெற உள்ளது. இதற்காக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் முகவர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் அனைவரும் மிகுந்த கவனத்துடனும், விழிப்புடனும் பணியாற்றி, வெற்றிக் கனியை சிந்தாமல், சிதறாமல் பெற்று கழகத்திற்கும், கூட்டணிக் கட்சிகளுக்கும் சமர்ப்பிக்கும் வகையில், பின்வரும் முக்கிய அம்சங்களை நினைவில் கொண்டு பணியாற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாக்கு எண்ணிக்கையின்போது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள்: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 4.5.2026 அன்று, கழகத்தின் சார்பிலும், கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் நியமிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களுடைய அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே, தேர்தல் நடத்தும் அலுவலரால் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடையாள அட்டையுடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்ல வேண்டும். எக்காரணத்தைக்



கொண்டும் காலதாமதமாக செல்லக்கூடாது.

வாக்கு எண்ணும் மையத்தில், வாக்கு எண்ணும் மேஜைகளுக்கு ஏற்றார்போல் முகவர்களை நாம் நியமித்திருக்கிறோம். அந்த முகவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நாற்காலிகளுக்குச் சென்று அமர்ந்துவிட வேண்டும். வாக்கு எண்ணும் மையத்திற்கு உள்ளே சென்றவர்கள், வாக்கு எண்ணிக்கை முடிவுற்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற வரையிலும், எக்காரணத்தைக் கொண்டும் வாக்கு எண்ணும் மையங்களில் இருந்து வெளியே வரக் கூடாது. மிகுந்த கவனத்தோடு வாக்கு எண்ணிக்கையை கண்காணிக்க வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை மையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் முறைப்படி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

தபால் வாக்கு எண்ணிக்கை நடைபெறும்போது, மிகவும் கவனமுடன் கண்காணிக்க வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் வைக்கப்பட்டுள்ள சீல் முறையாக உள்ளதா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும், ஏற்கெனவே படிவம் 17சின்படி வாக்குப் பதிவு நாளன்று பதிவு செய்யப்பட்ட வாக்குகளும் சரியாக உள்ளதா என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள தேதியையும், நேரத்தையும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்குப் பதிவு இயந்திரத்தின் சீல்களும், பதிவான வாக்குகளின் எண்ணிக்கையும் சரியாக இருந்தால் மட்டுமே, வாக்கு எண்ணிக்கையை தொடங்க அனுமதிக்க வேண்டும்.

ஒவ்வொரு சுற்றிலும் வாக்கு எண்ணிக்கையின் முடிவுகள் அறிவிக்கப்படும் போதும், நீங்கள் குறித்து வைத்திருக்கின்ற வாக்குகள், தேர்தல் நடத்தும் அலுவலரால் சரியாக அறிவிக்கப்படுகிறதா என்பதை கவனமுடன் பார்க்க வேண்டும்.

ஏதேனும் மாறுதல்கள் இருக்கின்றபட்சத்தில், வாக்கு எண்ணிக்கையை தொடராமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே தெரியப்படுத்த வேண்டும். வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை, வாக்கு எண்ணும் மையத்தின் பிரதான மேஜையின் முன்பு அமர்ந்திருக்கின்ற வேட்பாளரின் தலைமை முகவரிடத்திலே தெரியப்படுத்தி, அதை எழுத்துப்பூர்வமாக வேட்பாளரின் சார்பாக தேர்தல் நடத்தும் அலுவலரிடத்திலே கொடுத்து அதற்குண்டான ஒப்புகையை கட்டாயம் கேட்டுப் பெறவேண்டும். அதற்கான தீர்வு கிடைத்த பின்னர்தான், அடுத்த சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் யாரேனும், மாற்றுக் கட்சியினருக்கு ஆதரவாகவும், முறைகேடாகவும் செயல்படுகிறார்களா என்பதை உன்னிப்பாகக் கண்காணித்து, குறைகள் இருப்பின் சம்பந்தப்பட்ட மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வினை காண வேண்டும்.

திமுகவினர் வதந்திகளைப் பரப்புவதிலும், தில்லுமுல்லு செய்வதிலும், வன்முறையில் ஈடுபடுவதிலும் மிகவும் கைதேர்ந்தவர்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும். இதற்கு, கடந்த காலங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளை உதாரணமாகச் சொல்லலாம். ஆகவே, வாக்கு எண்ணும் மையங்களில் திமுகவினரால் தில்லுமுல்லு ஏதேனும் நடத்தப்படுகிறதா என்பதை மிகுந்த விழிப்போடு கண்காணித்து, முறைகேடுகள், துஷ்பிரயோகங்கள் ஏதேனும் நிகழ்ந்தால், அது சம்பந்தமாக மேலதிகாரிக்கு உடனடியாக தகவல் தெரிவித்து உரிய தீர்வு காண வேண்டும்.

வாக்கு எண்ணிக்கை முகவர்கள் அனைவரும் தங்களுக்கான வாக்கு எண்ணிக்கை மையங்களில், அனைத்து சுற்று வாக்கு எண்ணிக்கையும் நிறைவடைந்து முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் தான் அங்கிருந்து வெளியே வரவேண்டும்.

வேட்பாளர்கள் மற்றும் அவர்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள chief agentகளும், தங்களுக்கான வாக்கு எண்ணும் மையங்களில், வாக்கு எண்ணும் பணி முறையாக நடைபெறுகின்றனவா என்பதை விழிப்போடு கண்காணிக்க வேண்டும்.

அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திடும் வகையிலும், மக்கள் தீர்ப்பு நிலைநாட்டப்படும் வகையிலும், அனைவரும் மிகவும் விழிப்புடன் பணியாற்றிட வேண்டும். இது, ஜனநாயகப் பயிர் தழைத்தோங்க நாம் அனைவரும் ஆற்ற வேண்டிய இன்றியமையாத கடமை என்பதை நினைவில் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழக மக்களைக் காப்பதற்காக, தீயசக்தி திமுக மீண்டும் தலையெடுத்துவிடாமல் தடுத்து நிறுத்துவோம்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் முக்கிய அறிவிப்பு



நீலகிரிஏப். 26-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ற்கான தேர்தல் 23.04.2026 அன்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள 108 உதகமண்டலம், 109 கூடலூர் (தனி) மற்றும் 110 குன்னூர் ஆகிய 03 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்கு சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்துள்ளது.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு, வாக்குப்பதிவு மேற்கொள்ளப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் ஆகியவை போட்டியிட்ட வேட்பாளர்கள் / அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பொதுபார்வையாளர்கள் முன்னிலையில் காணொலி காட்சிப் பதிவு செய்யப்பட்டு, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட இருப்பு மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளின் படி, அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் (Government Polytechnic College, Udhagamandalam) வைக்கப்பட்டுள்ளது. காப்பறைக்கு ஆயுதம் தாங்கிய மூன்று அடுக்கு பாதுகாப்பு 24X7 கண்காணிப்புக் கேமராவின் (CCTV) கீழ் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும், காப்பறையின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகத் தங்களின் பிரதிநிதிகளை நியமிப்பது குறித்தும், மேலும் அவர்களைப் பாதுகாப்பு வளையத்தின் உட்பகுதிக்கு வெளியே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவது குறித்தும் எற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்வரும் 04.05.2026 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணுகை நிகழ்விற்கு போட்டியிட்ட வேட்பாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மத்தியப் பார்வையாளர்கள் முன்னிலையில் காணொலிப் பதிவின்கீழ் இந்த காப்பறை திறக்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



# வரையாடு கணக்கெடுப்பு பணி

நீலகிரி கூடலூர்ஏப். 26-

தமிழ்நாடு வனத்துறை வரையாடு திட்டத்தின் கீழ் இரண்டாம் வரையாடு கணக்கெடுப்பு 24.04.2026 முதல் 26.04.2026 வரை நடத்த உள்ளது. கூடலூர் வனக்கோட்டம், ஓ வேலி வனச்சரக எல்லைப் பகுதிக்கு உட்பட்ட வரையாடு கணக்கெடுப்பு ஓவேலி வனப்பகுதியில் வனப்பணியாளர்களால் துவங்கியது.



■ திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனது ஜனநாயக கடமையாற்றிய அனைத்து வாக்காளர்களுக்கும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி 13வது வார்டில் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.டி.குமார், பேரூர் கழக அவைத்தலைவர் அருள்தேவநேசன், முன்னாள் கவுன்சிலர் கோமதி சுந்தரம், வார்டு செயலாளர் தளபதி பாலாஜி, சுரேஷ், பயாஸ், ஈஸ்வரன், கோகுலகண்ணன், சிரஞ்சீவி, அருண், கிரி, ஆகாஷ் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் நன்றி தெரிவித்தனர்.



■ திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சியில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனது ஜனநாயக கடமையாற்றிய வாக்காளர்களுக்கு மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் புள்ளிலைன் ஊராட்சி புதுநகர், பாலாஜி கார்டனில் புழல் ஒன்றிய திமுக பொறுப்பாளர் அற்புதராஜ், துணைச் செயலாளர் ராஜேஸ்வரி எத்திராஜ் மற்றும் ராஜேந்திரன், அருணகிரி, மனோகரன், பத்மநாபன், சாக்ரடீஸ், மாதவன்,பிரேமலதா, 7இ பாஸ்கர், பாபு, கதிரவன், ரகு. தினேஷ், டில்லிபாபு, குமரேசன், அரிபிரபாகரன், கண்ணன், வடகரை விஜி, டில்லி, கமலக்கண்ணன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.




# உலக பூமி தினம்: கிருஷ்ணகிரியில் மஞ்சப்பை விழிப்புணர்வு பிரச்சாரம்

கிருஷ்ணகிரி, ஏப். 26-

உலக பூமி தினத்தை முன்னிட்டு, கிருஷ்ணகிரியில் மஞ்சப்பை (துணிப்பை) பயன்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.காலநிலை மாற்றம் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாடு காரணமாக பூமி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதை உணர்த்தும் வகையில், 1969 ஆம் ஆண்டு யுனெஸ்கோ மாநாட்டில் அமைதி ஆர்வலர் யிஷீலீஸ் விநீசிஷீஸீஸீமீறீ உலக பூமி தினத்தை கொண்டாட வேண்டுமென முன்மொழிந்தார். அதன் பேரில், 1970 ஏப்ரல் 22 முதல் உலகம் முழுவதும் உலக பூமி தினம் அனுசரிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு, கிருஷ்ணகிரி பழைய பேட்டை பேருந்து நிலையத்தில் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் பவுன்ராஜ் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டார். பேருந்துக்காக காத்திருந்த பயணிகளிடம், “உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் நலமாக வாழ, பூமியின் சுற்றுச்சூழலை பாதுகாப்பது அவசியம். குறிப்பாக நெகிழிப் பைகளை தவிர்த்து, மஞ்சப்பை போன்ற சுற்றுச்சூழல் நட்பு பொருட்களை பயன்படுத்த வேண்டும்” என்று வலியுறுத்தினார்.மேலும், பொதுமக்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டதுடன், மஞ்சப்பைகளும் வழங்கப்பட்டன.பவுன்ராஜ் கடந்த 25 ஆண்டுகளாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பணியில் ஈடுபட்டு வருகிறார். அவரது சேவைக்காக தமிழக அரசின் நல்லாசிரியர் விருது, பசுமை சாம்பியன் விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை உயர்வு

அண்ணாநகர், ஏப்.26-

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழ்நாடு மற்றும் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து லாரிகளில் காய்கறிகள் வருகின்றன. தற்போது கோடைகாலம் என்பதால் காய்கறிகள் வரத்து குறைந்து விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதன்படி, ஒரு கிலோ வெங்காயம் ரூ.20 முதல் ரூ.30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தக்காளி 30 முதல் 40 ரூபாய்க்கும் கேரட் 50 ரூபாய்க்கும் பீன்ஸ் 80 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அவரைக்காய் 60 ரூபாய்க்கும் கத்திரிக்காய் 25 ரூபாய்க்கும் வெண்டைக்காய் 40 ரூபாய்க்கும் பூண்டு 160 ரூபாய்க்கும் இஞ்சி 65 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ‘’இனிவரும் நாட்களில் காய்கறிகள் வரத்து குறைந்து மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது’’ என்று வியாபாரிகள் கூறினர்



# கிருஷ்ணகிரியில் வறுத்தெடுக்கும் வெயில்: நுங்கு, இளநீர் விற்பனை ஜோர்

கிருஷ்ணகிரி, ஏப். 26-

கிருஷ்ணகிரியில் கோடை வெயிலின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் வெப்பத்தை தணிக்க நுங்கு மற்றும் இளநீர் கடைகளுக்கு திரளாக செல்லும் நிலை உருவாகியுள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெப்பநிலை 39.4 டிகிரி செல்சியஸ் (103குதி) வரை உயர்ந்து காணப்படுகிறது. மாலை 6 மணியளவிலும் 100குதி வரை வெப்பம் நீடிப்பதால், முக்கிய சாலைகள் வெறிச்சோடி காணப்படுகின்றன. இரவு 10 மணி வரை கூட அனல் காற்று வீசுவதால், பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர். இதன் காரணமாக, வெப்பத்தை தணிக்கும் இயற்கை பானங்களான நுங்கு மற்றும் இளநீரின் தேவை அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் மத்தூர், ஊத்தங்கரை, மகாராஜகடை, நாரலப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நுங்குகளை கொண்டு வந்து, பெங்களூரு சாலையில் விற்பனை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு 2 நுங்கு 10 ரூபாய்க்கு விற்ற நிலையில், தற்போது ஒரு நுங்கு 10 ரூபாய்க்கு விற்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அதேபோல், இளநீர் விற்பனையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், இந்த இயற்கை பானங்கள் பொதுமக்களுக்கு உடனடி சுறுசுறுப்பையும் தணிவையும் வழங்கி வருகின்றன.



# முன்னாள் பம்மதுகுளம் ஊராட்சி மன்ற தலைவர் ராஜா வாக்காளர்களுக்கு நன்றி

மாதவரம், ஏப்.26-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சி லட்சுமிபுரம் கிராமத்தில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனது ஜனநாயக கடமையாற்றிய அனைத்து வாக்காளர்களுக்கு முன்னாள் பம்மதுகுளம் ஊராட்சி மன்ற தலைவர் ராஜா நன்றி தெரிவித்தார். இதில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.



# திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழா

திருவாரூர், ஏப்.26-

திருவாரூர்/ தஞ்சாவூர்: சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழாவையொட்டி, திருவாரூரில் நேற்று இசைக் கலைஞர்கள் பஞ்சரத்ன கீர்த்தனைகளை இசைத்தனர்.

திருவாரூரில் சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழா ஏப்.19ம் தேதி -சியாமா சாஸ்திரிகள் இல்லத்தில் தொடங்கி நடைபெற்று வருகிறது. - முத்துஸ்வாமி தீட்சிதர் க்ரஹ நூதன அரங்கத்தில், மங்கல இசை மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்த நிலையில், நேற்று - சத்குரு தியாகப்ரும்மத்தின் 259வது ஜெயந்தியை முன்னிட்டு, தியாகப்ரும்மம் இல்லத்தில் காலை உஞ்சவிருத்தி, விதை தானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றன.

தொடர்ந்து, முத்துசுவாமி நூதன க்ரஹ அரங்கில், பாலசுந்தரம், கார்த்தி மற்றும் உமாசங்கர், ஜெயசூர்யா குழுவினரின் நாகசுர இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், பிரபல வித்வான்கள், விதூஷிகள் பங்கேற்ற தியாகப்ரும்மத்தின் பஞ்சரத்ன கீர்த்தனையை, சங்கீத வித்வான்கள் டாக்டர் கணேஷ், ஆண்டாங் கோவில் சிவக்குமார், சுந்தரராஜன், வரப்பிரசாத், சுசித்ரா பாலசுப்பிரமணியன் மற்றும் வீணை, வயலின், மாண்டலின், புல்லாங்குழல், கடம், கஞ்சிரா, முகர்சிங் உள்ளிட்ட வாத்திய கலைஞர்கள் பலர் பங்கேற்று இசைத்தனர்.திருவையாறில் சத்குரு தியாகராஜர் சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது

திருவையாறில் சத்குரு தியாகராஜர் சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

சங்கீத மும்மூர்த்திகள் ஜெயந்தி இசை விழாக் குழுகவுரவத் தலைவர் டாக்டர் ஆர்.ராமசுப்பு, தலைவர் கார்த்திகேயன், துணைத் தலைவர் பாஸ்கர், மும்பை ஸ்ரீதரன், வேலுடையார் கல்விக் குழுமம் தியாகபாரி, டாட்டாஸ் மதி, மணக்கால் ராமகிருஷ்ணன், ஆடிட்டர் பாலாஜி வெங்கட்ராமன், வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்டத் தலைவர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த விழா நேற்று மாலை நிறைவடைந்தது.

திருவையாறில்..இதேபோல, தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறில் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சத்குரு தியாகராஜரின் 259வது ஜெயந்தி விழா நேற்று நடைபெற்றது.தியாகராஜரின் ஜீவ சமாதியில் நடைபெற்ற இவ்விழாவில் பரம்பரை பூஜா ஸ்தானிகர் தியாகராஜ சர்மா அபிஷேகம், அலங்காரம், மகா தீபாராதனை ஆகியவற்றை செய்தார்.மேலும், கர்னாடக இசைக் கலைஞர்கள், வித்வான்கள் தியாக பிரும்மத்தின் பஞ் சரத்தின கீர்த்தனைகள், சம்பிரதாய கீர்த்தனைகளுடன் இரவு வரை தியாகராஜருக்கு இசை அஞ்சலி செலுத்தினர்.

பின்னர், ஆஞ்சநேயர் உற்சவத்துடன் ஜெயந்தி விழா நிறைவடைந்தது. விழாவையொட்டி பத்தர்களுக்கு அன்னதானம் உள்ளிட்ட பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

# கிருஷ்ணகிரியில் மா விளைச்சல் 50% வரை பாதிப்பு அபாயம் - பூச்சி தாக்கம், வறட்சி காரணமாக விவசாயிகள் கவலை



கிருஷ்ணகிரி,ஏப்.26-

தமிழகத்தின் முக்கிய மாம்பழ உற்பத்தி மாவட்டமாக விளங்கும் கிருஷ்ணகிரியில், சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி நடைபெற்று வருகிறது. இங்கு விளையும் தரமான மாம்பழங்கள் உள்நாட்டிலும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால், இந்த ஆண்டு மாம்பழ உற்பத்தி கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உருவாகியுள்ளது.இந்த பருவத்தில் மாமரங்களில் பூத்த மாம்பூக்களில் பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளது. இதனால் மாம்பூக்கள் கருகி விழுவதோடு, விளைச்சல் சுமார் 50 சதவீதம் வரை குறையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இதனுடன், பருவமழை குறைவாக இருந்ததால் மேட்டு நிலங்களில் உள்ள மாமரங்களுக்கு போதிய நீர் கிடைக்கவில்லை.மேலும், அதிகரித்துள்ள கோடை வெப்பத்தால் மாம்பிஞ்சுகள் மரத்திலேயே உதிர்ந்து விடுகின்றன. நீர் பற்றாக்குறையால் பிஞ்சுகள் முழுமையாக வளர்ச்சி அடையாமல் சிறிய அளவிலேயே காணப்படுகின்றன. இதனால் இந்த ஆண்டின் மொத்த மா உற்பத்தி கடந்த ஆண்டை விட குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு கிருஷ்ணகிரியில் மா உற்பத்தி அதிகமாக இருந்த நிலையில், இந்த ஆண்டு பூச்சி தாக்கம் மற்றும் கடும் வெயில் ஆகிய இரட்டை காரணங்களால் விவசாயிகள் பெரும் இழப்பை சந்திக்கும் சூழல் உருவாகியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு, மா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண்துறை அதிகாரிகள் உடனடி உதவிகளை வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக மாமரங்களுக்கு தண்ணீர் வழங்கும் வகையில் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் தளர்வு

சென்னை, ஏப்.26-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்த நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. பறக்கும்படை, நிலை கண்காணிப்புக் குழுக்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. தமிழக சட்டப்பேரவைக்கு நேற்று முன்தினம் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது.வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு, அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களுக்கு சீல்வைத்து, மாநிலம் முழுவதும் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு, பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன.24




மணி நேரமும் சிசிடிவி மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திலும் தலா 500 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மே 4ம் தேதி காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது.பணம் கொண்டுசெல்ல வரம்பு இந்நிலையில், வாக்குப்பதிவு நிறைவடைந்ததால் தேர்தல் நடத்தை விதிகளை அமல்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த தலா 2,106 பறக்கும் படைகள் மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் திரும்பப் பெறப்பட்டன.

அதேநேரம், தேர்தல் நடத்தை விதிகள் மே 6ம் தேதி வரை அமலில் இருக்கும். விதிகளின்படி இந்த காலகட்டத்தில் உரிய ஆவணம் இன்றி, ரொக்கமாக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் கொண்டு செல்ல முடியாது. ரூ.10 ஆயிரம் மதிப்புக்கு மேல் பொருட்களை கொண்டு செல்லவும் முடியாது. ஆனால், சோதனையிட்டு பறிமுதல் செய்ய பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு குழுக்கள் இல்லை. எனவே, இரு படைகளையும் திரும்பப் பெற்றதை தளர்வாகவே விவசாயிகளும், சிறு வியாபாரிகளும் கருதுகின்றனர்.

# 5 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு 5 மரண தண்டனை விதிப்பு

சிவகங்கை, ஏப்.26-

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே 5 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த தொழிலாளிக்கு 5 மரண தண்டனை விதித்து சிவகங்கை போக்சோ நீதி மன்றம் தீர்ப்பளித்தது.சிங்கம்புணரி அருகே மருதிபட்டியைச் சேர்ந்த விறகு வெட்டும் தொழிலாளி சந்திரன் (49). இவருக்கு திருமணமாகி ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். இவர், 2023ம் ஆண்டிலிருந்து 5 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.இதுகுறித்து ஒரு சிறுமியின் தந்தை அளித்த புகாரின்பேரில்



திருப்பத்தூர் அனைத்து மகளிர் போலீஸார் வழக்குப் பதிந்து சந்திரனை 2024 பிப்ரவரி 13ம் தேதி கைது செய்தனர். பின்னர், அவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இதுதொடர்பான வழக்கு சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. அரசுத் தரப்பில் வழக்கறிஞர் தனலெட்சுமி ஆஜராகி வாதாடினார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் சந்திரனுக்கு மரண தண்டனை விதித்து நீதிபதிகோகுல்முருகன் நேற்று தீர்ப்பளித்தார்.

அந்தத் தீர்ப்பில் நீதிபதி கூறியிருப்பதாவது: குற்றம்சாட்டப்பட்ட சந்திரன், 'வீடியோ கேம்களை' காண்பித்தும், தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தும், செலவுக்கு ரூ.20 கொடுத்தும் சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.அரிதிலும் அரிதான இந்த வழக்கில் புகார் அளித்த சிறுமியின் தந்தை மற்றும் நீதிமன்றத்தில் தைரியமாக உண்மையைக் கூறிய பாதிக்கப்பட்ட 5 சிறுமிகளை பாராட்டுகிறேன்.குற்றம் சாட்டப்பட்ட சந்திரனுக்கு, சிறுமிகளை மிரட்டிய குற்றத்துக்கு 2 ஆண்டுகள் சிறை, ஆயிரம் ரூபாய் அபராதம், ஒருசிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்கு 20 ஆண்டுகள் சிறை, மற்ற 4 சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்கு தனித்தனியாக சாகும் வரை 4 ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது.மேலும் 12 வயதுக்குட்பட்ட சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக 5 மரண தண்டனை விதிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட 5 சிறுமிகளுக்கும் தலா ரூ.7 லட்சம் இழப்பீடாக தமிழக அரசு வழங்க வேண்டும். இவ்வாறு நீதிபதி தீர்ப்பளித்தார்.தீர்ப்பு அளித்து முடித்தவுடன் தீர்ப்பு எழுதிய பேனா முனையை உடைத்து வீசி யெறிந்தார். சிவகங்கை போக்சோ நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் மரண தண்டனை விதிக்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்துக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு

ஆண்டிபட்டி, ஏப்.26-

மதுரை சித்திரைத் திருவிழாவின் உச்ச நிகழ்வான கள்ளழகர் ஆற்றில் எழுந்தருளும் வைபவத்துக்காக வைகை அணையிலிருந்து நேற்று கால்வாய் வழியே தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மதுரையில் சித்திரை திருவிழான் முக்கிய நிகழ்வாக மே 1ம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நடைபெற உள்ளது. இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பர் என்பதால், வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது.இதன்படி மொத்தம் 170 மில்லியன் கனஅடி நீர் திறக்க நீர்வளத் துறை அரசாணை வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து நேற்று முதல் விநாடிக்கு



500கனஅடி நீர் திறக்கப்பட்டது.அணையின் சிறிய மதகுகள்வழியே வெளியேறிய நீர், முதலக்கம்பட்டி பிக்அப் அணையில் இருந்து கால்வாய் வழியே திருப்பி விடப்பட்டுள்ளது. தொடர்ந்து வாய்க்கால் வழியே மதுரை செல்லும் இந்த நீர் செல்லூர் கண்மாயில் தேக்கப்பட்டு பின்பு ஆற்றில் மீண்டும் கலக்கும்.வரும் 29ம் தேதி வரை தொடர்ந்து நீர் திறக்கப்படும். இணைப்புக் கால்வாயில் இறங்கவோ, குளிக்கவோ வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து நீர்வளத் துறையினர் கூறுகையில், வைகை அணையில் இருந்து மதுரை வரையிலான வைகை ஆறு வறண்டு கிடக்கிறது.வெயிலும் சுட்டெரிப்பதால், தொடக்கம் முதல் கடைசிவரை ஆற்றில் தண்ணீர் திறந்துவிட்டால் வழியிலேயே நீர் உறிஞ்சப்படும். ஆகவே சிமெண்ட் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் நீர் விரயம் இருக்காது. இதன்மூலம் குடிநீர்திட்டக் கிணறுகளின் நீர் ஆதாரமும் உயரும் என்றனர்.



# பள்ளிகளுக்கு கோடை விடுமுறை முன்னிட்டு மாமல்லபுரத்துக்கு கூடுதல் பஸ்கள்

## சுற்றுலா பயணிகள் வலியுறுத்தல்

மாமல்லபுரம், ஏப்.26-

மாமல்லபுரம் சுற்றுலாதலமாக விளங்குகிறது. இதனால் சென்னையின் பல்வேறு பகுதிகள் மற்றும் புறநகர் பகுதிகளான தாம்பரம், பல்லாவரம், குரோம்பேட்டை, ஆலந்தூர், மீனம்பாக்கம், மடிப்பாக்கம், வேளச்சேரி, சோழிங்கநல்லூர், துரைப்பாக்கம், மேடவாக்கம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் மாமல்லபுரம் வருகை தருகின்றனர். மேலும் வெளிநாடு, வெளிமாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இவர்கள், புராதன சின்னங்களான கடற்கரை கோயில், ஐந்து ரதம், அர்ஜூனன் தபசு, வெண்ணெய் உருண்டை பாறை, புலிக்குகை போன்றவற்றை சுற்றிப்பார்த்துவிட்டு அதன் முன்பு நின்று செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு மகிழ்கின்றனர்.Long Distance Bus & Rail

இந்நிலையில், கடந்த 17ம்தேதி முதல் மே 31ம்தேதி வரை பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை சேர்ந்த ஏராள மானோர் குடும்பத்தினருடன் மாமல்லபுரத்தில் குவிய தொடங்கியுள்ளனர். இனிவரும் நாட்களில் பயணிகளின் கூட்டம் தொடர்ந்து அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சென்னை அடையாறில் இருந்து தடம் எண் 588, தாம்பரத்தில் இருந்து தடம் எண் 515 என்ற 2 மாநகர ஏசி பேருந்துகள் மாமல்லபுரத்துக்கு இயக்கப்பட்டு வந்தது. கடந்த ஓராண்டுக்கு முன்பு முன்னறிவிப்புமின்றி திடீரென இரு பேருந்துகளும் நிறுத்தப்பட்டன.

இதனால் கோடை விடுமுறையை கழிக்க வரும் சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர். எனவே, சுற்றுலா பயணிகளின் நலன் கருதி மாதவரம், பிராட்வே, சென்னை கடற்கரை, அடையாறு, திருவான்மியூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து மாமல்லபுரத்துக்கு கூடுதல் மாநகர பஸ்களை இயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என சுற்றுலா பயணிகள், சமூக ஆர்வலகள் வலியுறுத்தியுள்ளனர்

# "பாஜகவுக்கு அசாமில் சதம், மேற்கு வங்கத்தில் இரட்டை சதம்" ஹிமந்த பிஸ்வ சர்மா நம்பிக்கை

கொல்கத்தா, ஏப்.26-

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலில் 100 இடங்களிலும், மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் 200 இடங்களிலும் வெற்றி பெற்று பாஜக ஆட்சி அமைக்கும் என்று ஹிமந்த பிஸ்வா சர்மா நம்பிக்கை தெரிவித்துள்ளார். கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, "இம்முறை நாங்கள் அசாமில் சதம் அடிப்போம். மேற்கு வங்கத்தில் இரட்டை சதம் அடிப்போம். அதாவது, அசாமில் 100 இடங்களை வெல்வோம். மேற்கு வங்கத்தில் 200 இடங்களை வெல்வோம்.மேற்கு வங்கத்தில் மாற்றத்தைக் கொண்டு வரவும் பாஜக ஆட்சியை அமைக்கவுமே பொதுமக்கள் பெருமளவில் வாக்களித்துள்ளனர். மேற்கு வங்க முதற்கட்டத் தேர்தலிலேயே பாஜக 110 இடங்களை வென்றுவிட்டது. மேற்கு வங்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சுனாமி போன்ற அலையால், பாஜக 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றால் அது அச்சரியப்படும் விஷயமாக இருக்காது.மேற்கு வங்கத்தில் 2016 மற்றும்



2019ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் நான் பங்கேற்றுள்ளேன். இம்முறை பாஜக மீதான பொதுமக்களின் பார்வை, நாங்கள் இதற்கு முன் கண்டிராத ஒன்று. மக்கள் இப்போது பாஜகவை வெளிப்படையாக ஆதரிக்கத் தொடங்கியுள்ளனர். ஆரம்பத்தில் வாக்களிக்கச் சென்றவர்களின் மனதில் ஒரு சிறிய தயக்கம் இருந்தது. முதல் கட்டத் தேர்தல் முடிந்த பிறகு இங்குள்ள சூழலில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் பாஜகவே வெற்றி பெறப் போகிறது. மக்கள் இதை இப்போது உறுதியாக நம்புகிறார்கள். நாட்டை வலுப்படுத்துவதும், மக்கள் தொகை சார்ந்த கவலைகளுக்குத் தீர்வு காண்பதும் நமது குறிக்கோளாக இருந்தால் நாம் பாஜகவை ஆட்சிக்குக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால், அடுத்த 20 ஆண்டுகளில் கிழக்கு இந்திய பகுதி வங்கதேச முஸ்லிம்களின் கைகளுக்குச் சென்றுவிடும்" என தெரிவித்தார். அசாமில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு கடந்த 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஏப். 23, 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்ததும்.அதன்படி, முதல்கட்டத் தேர்தல் 152 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஏப். 23ம் தேதி நடைபெற்றது. இரண்டாம் கட்டத் தேர்தலில் 142 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற உள்ளது. கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கும் தற்போது தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. தேர்தல் முடிவுகள் மே 4ம் தேதி வெளியாக இருக்கின்றன

# மே.வங்க தேர்தல் வெற்றிக்கு பிறகு டெல்லியைக் கைப்பற்றுவேன்

## மம்தா பானர்ஜி ஆவேசம்

கொல்கத்தா, ஏப்.26-

மேற்கு வங்க தேர்தல் வெற்றிக்கு பிறகு டெல்லியை கைப்பற்றுவேன் என்று மம்தா பானர்ஜி கூறினார்.மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு முதல் கட்ட தேர்தல் நேற்று முன்தினம் முடிவடைந்தது. இதையடுத்து வரும் 29ம் தேதி நடைபெறும் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் அனல் பறக்கிறது. முதல் கட்டத் தேர்தலில் 92 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பதிவாகி உள்ளன.இந்நிலையில் கொல்கத்தாவின் சவுரிங்கிப் பகுதியில் திரிணமூல் காங்கிரஸ் சார்பில் நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி பேசியதாவது: பாஜகவால் எங்



களை தோற்கடிக்க முடியாது. நாங்கள் அநீதிக்கு எதிராகப் போராடுகிறோம். எங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறோம். நான் வங்கத்தில் பிறந்தேன். இந்த வங்கத்திலேயே என் இறுதி மூச்சையும் விடுவேன்.

வங்கத்தில் வெற்றியை உறுதி செய்த பிறகு, நான் டெல்லியை எனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவேன். அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் நான் இதைச் செய்வேன். எனக்கு அதிகாரப் பதவி தேவையில்லை. டெல்லியில் பாஜக முழுமையாக தகர்க்கப்படுவதையே நான் விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் அவர்களின் அழிவு தவிர்க்க முடியாதது. என்றாலும் டெல்லியிலிருந்தும் பாஜக வெளியேற்றப்பட வேண்டும். இவ்வாறு மம்தா ஆவேசமாகப் பேசினார்.இதுகுறித்து கொல்கத்தாவில் இருந்து மத்திய அமைச்சர் அமித் ஷா கூறுகையில், "வங்காளத்தில் மம்தாவுக்கு என்று எதுவும் மிச்சமில்லை. அவர் எப்படி டெல்லிக்கு வருவார் ?" என்றார்.

## நாசிக் டிசிஎஸ் மதமாற்ற வழக்கு

# திடீரென பணி விலகிய ஊழியர்களிடம் மீண்டும் எஸ்ஐடி தீவிர விசாரணை

மும்பை. ஏப்.26-

மகாராஷ்டிராவின் நாசிக் நகரில் டிசிஎஸ் நிறுவனத்தின் பிபிஓ அலுவலகம் செயல்படுகிறது. இந்த நிறுவனத்தில் பெண் ஊழியர்களை அதிகாரிகள் மிரட்டி பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் மதம் மாற கட்டாயப்படுத்தியாக புகார் எழுந்துள்ளது.

கடந்த 2022 பிப்ரவரி முதல் 2026 மார்ச் வரை நடந்ததாக கூறப்படும் இந்த குற்றங்கள் தொடர்பாக 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குழுத் தலைவர்கள் மற்றும் மனிதவளத் துறையின் உதவிப் பொது மேலாளர் உட்பட 8 ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முக்கிய குற்றவாளியாக கருதப்படும் பெண் அதிகாரி நீடா கான் தலைமறைவாக இருக்கும் நிலையில் அவரை கைது செய்ய 3 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன.இந்நிலையில் இந்த வழக்கில் 2022 மற்றும் 2024க்கு இடையில் திடீரென பதவி விலகிய முன்னாள் ஊழியர்களிடம் எஸ்ஐடி மீண்டும் விசா



ரணை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள், நிறுவனத்தின் மனிதவளத் துறைக்கு 78க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்கள் அனுப்பியதாகவும், பலமுறை தொலைபேசி அழைப்புகள் செய்ததாகவும் கூறுகின்றனர். ஆனால், எதன் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.கைதானவர்களில் ஒருவரான மனிதவள அதிகாரி அஸ்வினி சைனானி, பாதிக்கப்பட்ட பெண்ணிடம் ''இதுபோன்ற விஷயங்கள் நடப்பது சகஜம்தான்'' என்று கூறி, புகார் அளிப்பதைத் தடுத்ததாகவும், இந்த விஷயத்தை கைவிடுமாறு வற்புறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவர் ஏப்ரல் 28 வரை 14 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.அஸ்வினி, இந்துப் பெண் ஊழியர்களைக் குறிவைத்து வாட்ஸ் அப் குழுக்களை உருவாக்கி, அவர்களின் விருப்பத்துக்கு எதிராக மதச் சடங்குகளில் ஈடுபடுமாறு கட்டாயப்படுத்தியதாக தெரியவந்துள்ளது. இந்த கும்பலால் வேறு பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் புகார் அளித்திட தனி வாட்ஸ் அப் எண்ணை போலீஸார் அறிவித்துள்ளனர். இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்கலாம்: போக்குவரத்துத் துறை முன்னாள் செயலர் பணிந்திர ரெட்டி கருத்து

சென்னை, ஏப்.26-

தனியார் பேருந்துகளை வாடகைக்கு எடுத்து இயக்கினால் கூட்டம் அதிகரிக்கும் போது பேருந்து தட்டுப்பாட்டைத் தவிர்க்கலாம் என போக்குவரத்துத் துறை முன்னாள் செயலர் பணீந்திர ரெட்டி தெரிவித்துள்ளார்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்களது சொந்த ஊரில் வாக்களிக்க கடந்த 21, 22 ஆகிய தேதிகளில் புறப்பட்டுச் சென்றனர்.பண்டிகைக் காலம் போல் ஏராளமானோர் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டுச் சென்றதால் சென்னையிலிருந்து திருச்சி,



மதுரை, கோவை, நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு வழக்கமான பேருந்துகளுடன் சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட்டன. பயணிகள் தவிப்புஇதனால் பேருந்து நிலையம் முழுவதும் பயணிகள் கூட்டம்காணப்பட்டது. நீண்ட நேரம் காத்திருந்தும் தங்கள் ஊர்களுக்கான பேருந்துகள் வராமல் இருந்ததால் ஆயிரக்கணக்கான பயணிகள் தவித்தனர். இதனால் ஆத்திரமடைந்த பயணிகள் ஏராளமானோர் போக்குவரத்து அதிகாரிகளிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்த கூடுதல் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த விவகாரம் சர்ச்சையான நிலையில் பண்டிகைக் காலங்கள், தேர்தல் போன்ற கூட்டம் அதிகம் இருக்கும் நேரங்களில் ஒப்பந்த முறையில் வாடகைக்கு எடுத்து இயக்கினால் இந்த கூடுதல் பேருந்து தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் என முன்னாள் போக்குவரத்துத் துறை செயலர் பணீந்திர ரெட்டி அறிவுறுத்தி யுள்ளார். இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப் பதாவது: தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் இது போன்ற அதிகப்படியான பயண தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு குறைவாக உள்ளது. தனியார் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் எடுத்து இயக்குவது இந்த தேவையைப் பூர்த்தி செய்ய உதவலாம். தெற்கு ரயில்வேயும் இந்த நேரங்களில் பங்களிப்பை அளிக்க வேண்டும்.

பொதுமக்களும் தங்களின் பயணத்தை திட்டமிட வேண்டும். குடும்பமாகச் செல்வோர் வார நாட்களிலும், அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் வார இறுதி நாட்களில் தங்கள் பயணங்களை திட்டமிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மானாமதுரையில் சத்குரு ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் 46வது ஆண்டு ஆராதனை விழா

மானாமதுரை ஏப்.26-
சிவகங்கை சமஸ்தானத்தைச் சேர்ந்த மானாமதுரை ஸ்ரீ ஆனந்தவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ சோமநாதர் ஆலயத்தில் அமைந்துள்ள சத்குரு ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் ஜீவ சமாதியில், 46வது ஆண்டு ஆராதனை விழா ஏப்ரல் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் (சனி மற்றும் ஞாயிறு) மிக விமர்சையாக நடைபெறுகிறது.விழா சிறப்பம்சங்கள்:கர்நாடக இசை கலைஞர்களின் குருவாகப் போற்றப்படும் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திராள் நினைவாக ஆண்டுதோறும் நடைபெறும் இவ்விழாவில், இந்த ஆண்டும் ஏராளமான இசை கலைஞர்கள் பங்கேற்று தங்கள் இசை அஞ்சலியைச் செலுத்துகின்றனர்.முக்கிய நிகழ்வுகள்:பூஜைகள்: உஞ்சவிருத்தி, கோஷ்டி கானம், விக்னேஸ்வர பூஜை, வடுக பூஜை, கன்யா சுவாசினி பூஜை மற்றும் தம்பதி பூஜைகள் நடைபெற உள்ளன.கலை நிகழ்ச்சிகள்: இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாராட்டு விழா: விழாவின் ஒரு பகுதியாகப் பாராட்டு விழாக்களும் நடைபெறுகின்றன. நடைபெறும் இடம்:இந்த ஆராதனை விழா மற்றும் இசை நிகழ்ச்சிகள் அனைத்தும் மானாமதுரை பைபாஸ் சாலையில் உள்ள எம்.எஸ்.பி.ஏ. உண்ணாமலை அம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றன. விழாவிற்கான ஏற்பாடுகளை ஆராதனை குழுவினர் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

# மானாமதுரை சட்டமன்றத் தொகுதி: விறுவிறுப்பான வாக்குப்பதிவு பெண்கள் அதிக அளவில் பங்கேற்பு



மானாமதுரை ஏப்.26-
சிவகாங்கை மாவட்டம், மானாமதுரை (தனி) சட்டமன்றத் தொகுதிக்கான வாக்குப்பதிவு குறித்த அதிகாரப்பூர்வ விவரங்களை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. கடந்த ஏப்ரல் 24, 2026 அன்று நடைபெற்ற இந்தத் தேர்தலில், தொகுதி முழுவதும் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்தது. வாக்காளர் மற்றும் வாக்குப்பதிவு விவரங்கள்
மானாமதுரை தொகுதியில் மொத்தம் 2,59,382 வாக்காளர்கள் உள்ளனர். இதில் ஆண்கள் 1,27,349 பேர், பெண்கள் 1,32,026 பேர் மற்றும் இதர பிரிவினர் 7 பேர் ஆவர்.தேர்தல் முடிவில் தொகுதியில் மொத்தம் 2,05,207 வாக்குகள் பதிவாகியுள்ளன. அதன் விரிவான விவரங்கள்:
ஆண்கள்: 95,652
பெண்கள்: 1,09,553
இதர பிரிவினர்: 2வாக்குச்சாவடி வாரியான நிலவரம் தொகுதியில் உள்ள மொத்தம் 369 வாக்குச்சாவடிகளில் சில முக்கியப் பகுதிகளின் வாக்குப்பதிவு நிலவரம் பின்வருமாறு: கீழடி: அரசு மேல்நிலைப் பள்ளியில் (வாக்குச்சாவடி எண் 47) 959 வாக்குகள் பதிவாகி அதிகப்படியான எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளது. பூவந்தி: இப்பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் (வாக்குச்சாவடி எண் 9) 902 வாக்குகள் பதிவாகியுள்ளன. திருப்புவனம்: இங்குள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியின் பல்வேறு அறைகளில் அமைக்கப்பட்ட வாக்குச்சாவடிகளில் சராசரியாக 600 முதல் 700 வாக்குகள் வரை பதிவாகியுள்ளன. இளையான்குடி: இங்குள்ள மேலப்பள்ளிவாசல் தொடக்கப் பள்ளி மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் மக்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர். பெண்களின் ஆதிக்கம் இந்தத் தேர்தலில் ஆண்களை விட பெண்களே அதிக ஆர்வத்துடன் வந்து வாக்களித்துள்ளது தரவுகளின் மூலம் தெரியவருகிறது. தொகுதியின் மொத்த வாக்குப்பதிவில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களை விட 13,901 அதிகமாக உள்ளது. மேலும், வாக்குச்சாவடி எண் 196 மற்றும் 206 ஆகிய இடங்களில் தலா ஒரு 'இதர' பிரிவைச் சேர்ந்த வாக்காளர் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளனர்.




# மானாமதுரையில் தொடர்ந்து தாகம் தணிக்கும் பசுமை செயல் குழு: 14வது நாளாக மோர் வழங்கும் மனிதநேய சேவை




மானாமதுரை ஏப்.26-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களின் தாகம் தணிக்க பசுமை செயல் குழு சார்பில் தொடர்ந்து 14வது நாளாக மோர் வழங்கும் சேவை நடைபெற்றது.மானாமதுரை அருள்மிகு ஆனந்தவல்லி அம்மன் கோயில் அருகே, வைகையாற்றுக்கு செல்லும் பாதையில் நடைபெற்ற இந்த முகாமில், கடும் வெயிலால் அவதிப்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகனங்களில் சென்ற பொதுமக்கள் மோர் பருகி பயனடைந்தனர். கத்திரி வெயில் தொடங்கும் முன்பே வெப்பம் அதிகரித்துள்ளதால், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு இந்த மனிதநேய பணியை பசுமை செயல் குழுவினர் தொடர்ந்து செய்து வருகின்றனர்.தொடர்ந்து 14 நாட்களாக நடைபெற்று வரும் இந்த மோர் வழங்கும் சேவைக்கு மானாமதுரை மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. பொதுமக்களின் நலனை முன்னிறுத்தி செயல்படும் பசுமை செயல் குழுவினரின் இந்த சேவை பாராட்டுக்குரியது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# வன்முறையை தூண்டும் கருத்துகளுக்காக அமித் ஷா மீது வழக்கு தொடரப் போவதாக மம்தா அறிவிப்பு



கொல்கத்தா, ஏப்.26-
மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்த வன்முறையை தூண்டும் கருத்துகளுக்காக அவர் மீது சட்ட ரீதியாக வழக்கு தொடரப் போவதாக முதல்வர் மம்தா பானர்ஜி அறிவித்தார்.ஹூக்ளியில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய மம்தா பானர்ஜி, "வன்முறையை தூண்டும் கருத்துகளுக்காக அமித் ஷா சட்டரீதியான வழக்கை எதிர்கொள்ள இருக்கிறார். ஓர் உள்துறை அமைச்சராக இருந்து கொண்டு, அவர் இத்தகைய கருத்துகளைத் தெரிவித்ததை ஏற்க முடியாது.ஓர் உள்துறை அமைச்சர் என்ன மாதிரியான மொழியைப் பயன்படுத்துகிறார்? தேர்தலுக்குப் பிறகு மக்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டுத் தண்டிப்போம் என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இத்தகைய மனநிலையுடன், உங்களால் மேற்கு வங்கத்தில் ஒருபோதும் வெற்றி பெற முடியாது" என்றார்.முன்னதாக, ஏப்ரல் 24 அன்று, ஆரம்பாக்கில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசிய அமித் ஷா, "தீதியின் (மம்தா) குண்டர்கள் யாரும் 29ஆம் தேதி தங்கள் வீடுகளை விட்டு வெளியே வரக்கூடாது என்று நான் எச்சரிக்கிறேன். 29ஆம் தேதி ஆரம்பாக் மக்களுக்கு ஏதேனும் தொல்லைகள் நேர்ந்தால், மே 5ஆம் தேதிக்குப் பிறகு, அந்தக் குண்டர்களைத் தலைகீழாகத் தொங்கவிட்டு நாங்கள் அவர்களைச் சரிசெய்வோம்" என்று தெரிவித்தார்.மேற்கு வங்கத்தில் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு ஏப்ரல் 29 அன்று நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4 அன்று நடைபெறுகிறது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலின் முதல் கட்ட வாக்குப் பதிவு ஏப்ரல் 23 அன்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதில் 91.78 சதவீதம் பேர் வாக்களித்தனர். மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் பாஜக இடையே கடும் போட்டி நிலவுகிறது. காங்கிரஸ் தனித்தும், இடதுசாரிகள் தனி அணியாகவும் களமிறங்கியுள்ளதால் 4 முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது



# ஈரான் போர் தாக்கம்: அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு கணிசமாகக் குறைந்தது


வாஷிங்டன், ஏப்.26-
ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மார்ச் 28ம் தேதி தாக்குதலை தொடங்கின. இந்த போர் 38 நாட்கள் நடைபெற்றது. அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2 வார கால சண்டை நிறுத்த ஒப்பந்தம் அறிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்க ராணுவம் கூறியதாவது: ஈரானில் மொத்தம் 13,000க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கினோம். ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இது அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வாங்கும் எண்ணிக்கையை விட 10 மடங்கும் அதிகம். ஒரு டொமஹாக் ஏவுகணையின் விலை 3.6 மில்லியன் டாலர்.

இவை தொலைதூர இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தவை. ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதால், அமெரிக்காவின் டொமஹாக் ஏவுகணையின் கையிருப்பு 3,000மாக குறைந்துள்ளது. இதேபோல், எதிரி விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க 1,200 பேட்ரியாட் ஏவுகணைகளை ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது.இதன் விலை 4 மில்லியன் டாலருக்கு மேலாகும். கடந்தாண்டில் 600 பேட்ரியாட் ஏவுகணைகளை மட்டுமே அமெரிக்கா உற்பத்தி செய்தது. மேலும், வானில் இருந்து தரை இலக்குகளை தாக்கும் 1,100 (ஜாஸ்மர்) ஏவுகணைகளையும் அமெரிக்க ராணுவம் ஈரான் போரில் பயன்படுத்தியது. இதன் காரணமாக இந்த வகை ஏவுகணைகள் அமெரிக்க ராணுவத்தில் தற்போது 1,500 மட்டுமே இருப்பில் உள்ளது. இது 600 மைல் தூரமுள்ள இலக்குகளைத் தாக்கும்.இதன் விலை 1.1 மில்லியன் டாலர். 1,000க்கும் மேற்பட்ட ஏடிஏசிஎம்எஸ் என்ற தரை இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. இவ்வாறு அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் ஆயுத கையிருப்பு குறைந்துள்ளது.

ஈரானின் விலை குறைந்த ட்ரோன் தாக்குதலை சமாளிக்க, அமெரிக்கா அதிக விலையுள்ள பேட்ரியாட் ரக ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. காலியான ஆயுதங்களை மீண்டும் வாங்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் பென்டகன் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு வெகு நாட்களாகும் எனத் தெரிகிறது

# திருப்பதி ஏழுமலையானுக்கு 7 தங்கப் பதக்கம் காணிக்கை



திருமலை, ஏப்.26-
திருப்பதி ஏழுமலையானுக்கு நேற்று ரூ.95 லட்சம் மதிப்புள்ள 7 தங்க பதக்கங்களை பெங்களூருவை சேர்ந்த பக்தர் வழங்கினார். திருப்பதி ஏழுமலையானை பெங்களூருவை சேர்ந்த பக்தர் டாக்டர்.எம். மஹாதேவம்மா மற்றும் அவரது குடும்பத்தினர் நேற்று தரிசனம் செய்தனர். அதன் பின்னர், கோயிலுக்குள் உள்ள ரங்கநாயக மண்டபத்தில், மஹாதேவம்மா ஏழுமலையானுக்கென ஆர்டர் கொடுத்து செய்த 7 தங்க பதக்கங்களை, தேவஸ்தான நிர்வாக அதிகாரி எம். ரவிசந்திராவிடம் ஒப்படைத்தார். ஒவ்வொன்றும் விதவிதமான கற்கள் பொறிக்கப்பட்டு மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த எடை 753 கிராம்கள் என்றும், இதன் மதிப்பு ரூ.94.80 லட்சம் எனவும் மஹாதேவம்மா தெரிவித்தார். இவை உற்சவங்களின் போது உற்சவ மூர்த்திகளுக்கு உபயோகப்படுத்தப்படலாம் என அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர். இந்நிகழ்ச்சியில் தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கைய்ய சவுத்ரி உட்பட பலர் பங்கேற்றனர்

# போருக்குப் பிறகு முதன்முறையாக ஈரானில் விமான சேவை தொடக்கம்



தெஹ்ரான், ஏப்.26-
இரண்டு மாதங்களுக்கு முன்பு அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுடன் போர் தொடங்கிய பிறகு முதன்முறையாக, தெஹ்ரானின் இமாம் காமேனி சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஈரான் சனிக்கிழமையன்று விமான சேவைகளை மீண்டும் தொடங்கியது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், தெஹ்ரானில் இருந்து ஈரான் வர்த்தக ரீதியான விமான சேவைகளை மீண்டும் தொடங்கியுள்ளது. தெஹ்ரானில் இருந்து இஸ்தான்புல், ஓமனில் உள்ள மஸ்கட் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள மதீனா ஆகிய இடங்களுக்கு விமானங்கள் புறப்பட்டதாக அரசு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது. போர் நிறுத்தம் ஏற்பட்ட பின்னர், இந்த மாத தொடக்கத்தில் ஈரானின் வான்வெளி பகுதியளவு திறக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்காக வெள்ளிக்கிழமை இரவு இஸ்லாமாபாத் சென்ற ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி, பாகிஸ்தானின் உயர்மட்ட ராணுவ மற்றும் அரசியல் தலைவர்களுடன் இரண்டு சுற்று சந்திப்புகளை நடத்திய நிலையில் வர்த்தக விமான சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. சனிக்கிழமையன்று அமெரிக்கத் தூதர்கள் இஸ்லாமாபாத் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், ஈரான் தூதுக்குழு மூத்த தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடரும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஈரானுடனான போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கும் முயற்சியாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோரை பாகிஸ்தானுக்கு அனுப்புவார் என்று வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியது. இருப்பினும், அராக்சி வந்தடைந்த சிறிது நேரத்திலேயே, அமெரிக்கப் பிரதிநிதிகளுடனான எந்தவொரு தொடர்பும் மறைமுகமாகவே இருக்கும் என்றும், பாகிஸ்தான் அதிகாரிகள் இரு தரப்பினருக்கும் இடையே செய்திகளைப் பரிமாறிக்கொள்வார்கள் என்றும் ஈரான் கூறியது.இந்த வார தொடக்கத்தில் ட்ரம்ப் போர்நிறுத்தத்தை காலவரையின்றி நீட்டிப்பதாக அறிவித்த பின்னர், அமெரிக்காவையும் ஈரானையும் மீண்டும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவர பாகிஸ்தான் முயன்று வருகிறது.

# ரூ.410 கோடி ஜிஎஸ்டி மோசடியில் ஈடுபட்டவர் கைது



பெங்களூரு, ஏப்.26-
போலி நிறுவனங்கள் மூலம் ஜிஎஸ்டி மோசடி நடைபெறுவதாக கர்நாடக வணிக வரித் துறையின் அமலாக்கப் பிரிவுக்கு புகார் வந்தது. இதுகுறித்து அதிகாரிகள் நடத்திய விசாரணையில் முகமது தவுக்கீர், போலி ஷெல் நிறுவனங்கள் வாயிலாக உள்ளீட்டு வரி வரவு மூலம் கோடிக்கணக்கான ரூபாய் ஜிஎஸ்டி வரி ஏய்ப்பு செய்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து வணிக வரித்துறை அதிகாரிகள், இந்த மோசடி யில் ஈடுபட்ட முக்கிய நபரான முகமது தவுக்கீரை (42) கைது செய்தனர். ஆந்திராவை சேர்ந்த இவர் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் போலியான ஆவணங்கள், தவறான முகவரிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி போலி நிறுவனங்களை உருவாக்கி ஜிஎஸ்டி (GST) பதிவுகளைப் பெற்று மோசடி செய்துள்ளார். முகமது தவுக்கீரிடம் நடத்திய விசாரணையில், ரூ.410 கோடி அளவுக்கு மோசடிப் பரிவர்த்தனைகள் செய்தது தெரியவந்தது. இந்த மோசடியில் அவரது கூட்டாளி முகமது பாஷா என்பவரை போலீஸார் தேடி வருகின்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161